செ.வெ.எண் : 04 / செப்டம்பர் நாள் : 03.09.2017

**இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள 429 ஊராட்சிகளிலும்**

**தூய்மை பாரத இயக்கம் திட்டத்தின் சார்பில் வருகிற 04.09.2017 அன்று நடைபெறவுள்ள கட்டுரைப் போட்டி மற்றும் குறும்பட போட்டிகளுக்கு விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்**

**மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள 429 ஊராட்சிகளிலும் தூய்மை பாரத இயக்கம் திட்டத்தின் சார்பில் வருகிற 04.09.2017 அன்று காலை 10.30 முதல் பகல் 1 மணி வரை "**தூய்மையான இந்தியாவை உருவாக்குவதற்கு, என்னால் இயன்றவை என்ன"** என்ற தலைப்பில் கட்டுரை போட்டியும் **"தூய்மையான இந்தியாவை உருவாக்குவதற்கு எனது பங்களிப்பு"** என்ற தலைப்பில் குறும்படம் போட்டியும் நடைபெற உள்ளது. இப்போட்டிகளில் கலந்து கொள்வதற்கு தேவையான விண்ணப்பப் படிவத்தை அனைத்து கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களிலும் பெற்றுக் கொண்டு மேற்காணும் போட்டிகளில் வயது வித்தியாசமின்றி அனைவரும் கலந்து கொள்ளலாம்.

போட்டிகளில் வெற்றி பெற்றும் முதல் 3 இடங்களில் வெற்றி பெறுபவர்களுக்கு தேசிய மற்றும் மாவட்ட அளவில் அக்டோபர் 2, 2017 அன்று விருது மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்கப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**